பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

When only The best is Good Enough

Buy Solide Pumps

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்

பம்பையே வாங்குங்கள்

சுடர்: 5 சுக்கில ஆண்டு மாசி மீ 28 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 14 (12-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 31

# தமிழ் இயக்கங்கள் நேற்று திருமலையை விட்டுக் காலி!

## இந்திய விமானப்படை விமானத்தில் வரதரும் சகாக்களும் புறப்பட்டனர்

திருகோணமலை, மார்ச் 12

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் மட்டும் இயங்கி வந்த ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், ரெலோ ஆகிய இயக்கங்கள் நேற்றுடன் திருகோணமலையை விட்டு முற்றாகக் காலி செய்தன. அந்த இயக்கங்களின் உறுப்பினர்கள் தற்போது இந்தியாவில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் அகதிகள் அந்தஸ்துடன் தஞ்சம் புகுந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் தமது குடும்பத்துடனும், சகாக்களுடனும் நேற்றுக் காலை ஏழு மணிக்கு இந்திய விமானப்படையின் விசேட விமானத்தில் புறப்பட்டுச் சென்றார்.

திரு. வரதராஜப்பெருமாளுடன் அவரது அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்னேஸ்வரனும் அவரது குடும்பத்தினரும், வரதரின் தனிப்பட்ட செயலாளர், மெய்ப்பாதுகாவலர்கள் ஆகியோரும் இந்த விசேட விமானத்தில் புறப்பட்டனர்.

புறப்படுவதற்கு முன்னர் திரு. வரதராஜப்பெருமாள் பத்திரிகைகளுக்கு செய்தி ஒன்றை விடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த முடிவை அவர் பின்னர் கைவிட்டுவிட்டதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

திருகோணமலை நகரில் இருந்து இந்தியப் படையினர் தற்போது சீனக்குடா நோக்கி நகர்ந்து செல்கின்றனர்.

தற்போது நகரத்தில் மனையாவெளிப் பகுதியில் மட்டும் படையினர் இருப்பதாகவும் - இன்று அல்லது நாளை அவர்கள் நகரத்தை விட்டு முற்றாக வெளியேறுவார்கள்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். அணி
## பத்மநாபா உட்பட 296 பேர் ஒரிஸ்ஸா சென்றடைந்தனர்

புவனேஸ்வர், மார்ச் 12

திருகோணமலையில் இருந்து 296 தமிழர்கள் இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் நேற்று ஞாயிற்றுக் கிழமைஒரிஸ்ஸா தலைநகர்புவனேஸ்வர் போய்ச்சேர்ந்தனர்.

ஈ. பி. ஆர். எல், எவ்.செயலாளர்நாயகம் திரு கே. பத்மநாபா வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் பத்துப்பேர் மற்றும் 29பெண்கள், 25குழந்தைகள் இந்தக் குழுவில் இருந்தனர்.

இவர்கள் விமான நிலையத்தில் இருந்து நகரில் உள்ள தற்காலிக முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப் பட்டனர்.

அங்கிருந்து கோரக்பூர் மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு என்று அமைக்கப்பட்ட முகாம்களுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்படுவர். [ஒ-எ]

## யாழ். மாவட்ட சூழல் ஆய்வுக்கு ரூபா 2 லட்சம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ் மாவட்டத்தில் சூழல் மாசடைவது குறித்து ஆய்வு மேற்கொள்ள 2 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவை சூழல் பாதுகாப்பு அதிகார சபை வழங்கி உள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான இந்த அதிகார சபையே இந்த ஆய்வுக்கு உதவி வழங்கியுள்ளது.

இந்த ஆய்வு நான்கு மட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

1. மண் அள்ளுதல், 2. ஏரிகளில் வளரும் தாவர அழிவு, 3. யாழ் நகர குப்பை கூழங்கள், 4. கிராமிய குளங்களால் பாதிப்பு ஆகிய நான்கு வகையில் இந்த ஆய்வை யாழ் பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை மேற்கொள்ள இருக்கிறார். (இ-3)

## வீதி திருத்த றோலர்

யாழ்ப்பாணம், மார்ச்,12

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட வீதிதிருத்த வேலைகளுக்கு றோலர் இயந்திரம் ஒன்று வந்துசேர்ந்துள்ளது.

குப்பைகளை அகற்றக்கூடிய 5 ரிப்பர் லொறிகளும், ஒரு தண்ணீர் பௌசரும் மாத இறுதியில் வந்துசேர விருக்கின்றன. (இ-3)

## முச்சந்தி முரளி



அடுத்த வருஷ நிதியை ஒழுங்காய் செலவழிச்சிட்டால் பிரச்சினை இல்லை தூண்டியளே....!

## பூண்டுலோயாவில் இரு தமிழர் சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச் 12

பூண்டுலோயாவில் இரு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சதாசிவன், மகாதேவன் ஆகிய இருவருமே கொலையுண்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிகளுடன் வீட்டினுள் புகுந்த இனந்தெரியாத ஐவர் இவர்களைச் சுட்டுக்கொன்றதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் மூவர் கொலையுண்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஒ)

## இந்திய பட்ஜெட் விவாதத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை!

புதுடில்லி, மார்ச். 12

இந்திய நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

ரயில்வே பட்ஜெட் இம்மாதம் 14 ஆம் திகதியும் பொது பட்ஜெட் இம்மாதம் 19 ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பட்ஜெட் தொடர் விவாதத்தின்போது பஞ்சாப், காஷ்மீர் மற்றும் இலங்கைத் தமிழர் பிரச்சினை ஆகியன முக்கிய இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## அரச ஊழியருக்கு இனி ரூ. 1,500 பண்டிகை முற்பணம்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கான சம்பள முற்பணத்தை ஐந்நூறு ரூபாவால் அதிகரிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது ஆயிரம் ரூபாவே சம்பள முற்பணமாக வழங்கப்படுகிறது. அரசின் புதிய தீர்மானத்தின்படி இனிமேல் சம்பள முற்பணமாக ஆயிரத்து 500ரூபாவை அரசு ஊழியர் பெறலாம்.

இந்த பண்டிகைக்கால சம்பள முற்பண அதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசதுறையில் பணிபுரியும் நிரந்தர, தற்காலிக, சமாசமய ஊழியர்களும் இந்த சம்பள முற்பணம் பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு சென்ற வருட நிதியை இவ்வருடம் பாவிக்க அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்-மாவட்ட அபிவிருத்திக்காக கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை இவ்வருடம் பாவிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட பணத்தில் சொற்ப அளவே செலவிடப்பட்டிருந்தது.

மீதியான பணத்தை இவ்வருடத்தில் செலவிடும்படி அரசு யாழ்-செயலகத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதே நேரம் இவ்வாண்டுக்கு ஒதுக்கப்பட்ட 250 லட்சம் ரூபாவில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள்குறித்து திணைக்களத் தலைவர்களுடன் திட்டமிடல் பகுதி ஆராய்ந்து வருகிறது. (ஒ-3)

## தமிழ் தேசிய இராணுவத்தினர் சரணடைந்தால் பாதுகாப்பு!
### இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

சரணடையும் தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவை தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களை நேற்று முன்தினம் இலங்கைப்படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் வீசினர்.

எந்த எந்த முகாம்களில் சரணடையலாம்? சரணடைபவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் ஆகிய விவரங்கள் இத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளன.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் தமிழ் தேசிய இராணுவத்தினருக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுவோர் அமைதிப்படை விலகலைத்தொடர்ந்து திருமலையைவிட்டு வேறு இடங்களுக்குத் தப்பி ஓடுவதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (ஒ-எ)

## எய்ட்ஸ் பெண்ணுக்கு பிரசவம் :
## உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியை நாடுகிறது அரசு !

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவம் பார்ப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது.

நிறைமாதக் கர்ப்பிணியான இந்தப்பெண்ணை பிரசவத்திற்கு அனுமதிக்கும்படி அரசாங்கம் கொழும்பு டி சொய்சா மருத்துவமனை டாக்டர்களிடம் கேட்டிருந்தது.

ஆனால் இந்த மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயாளிக்கு பிரசவம் பார்க்கக்கூடிய வசதிகள் ஏதும் இல்லை எனக் கூறப்பட்டது.

அத்துடன் அங்கு பணிபுரியும் டாக்டர்களும் ஊழியர்களும் பலத்த எதிர்ப்பை காட்டி வருகின்றனர் என்பதும் குறிப்பிடப்படத்தக்கது. [ஒ]

## ஈழத்தமிழரின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும்
### இந்தியப் பிரதமர் சிங் நம்பிக்கை

புதுடில்லி மார்ச் 12

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் அவர்களின் ஜனநாயக அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

இப்படி இந்தியப் பிரதமர் வி. பி. சிங் பேட்டி ஒன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

இம்மாத முடிவினுள் அமைதிப்படை முற்றாக இலங்கையில் இருந்து வெளியேறிவிடும் இது இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்த நல்ல அடிப்படையாக அமையும் என்றும் திரு. சிங் தெரிவித்தார். (ஒ.எ)

## மாகாண கல்வி பணிப்பாளராக சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக திரு. இரா. சுந்தரலிங்கம் நியமிக்கப்படலாம் என்று நம்பகமாக தெரிய வந்தது.

மன்னார் மாவட்ட பிரதிக்

[5 ஆம் பக்கம்பார்க்க]

## செய்திச் சாரம்

### இன்ரர்சிற்றி

யாழ்ப்பாணம், மார்ச். 12

இன்று ஆரம்பமாகவிருந்த இன்ரர்சிற்றி ரயில் சேவை நடைபெறக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் நேற்று மாலை தெரிவித்தனர்.

யாழ். ரயில் திணைக்கள அதிகாரிகள் நேற்று மாலை அநுராதபுரம் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது இச்சேவை பற்றி தமக்கு அறிவிப்பு இல்லை என பதில் அளிக்கப்பட்டது. (இ-3)

### யாழ் வாசி கைது

கொழும்பு, மார்ச் 12

7 லட்சம் ரூபா பெறுமதியான ஹெறோயின் போதைவஸ்துவுடன் திருச்சியில் இருந்து கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கிய யாழ்ப்பாணம் வாசி ஒருவரை சுங்க அதிகாரிகள் சென்ற சனிக்கிழமை காலை பிடித்தனர்.

அந்த நபர், தான் கொண்டு வந்த கார்ட்போர்ட் பெட்டியினுள் இந்த 1,400 கிராம் போதைவஸ்துவை மறைத்து வைத்திருந்தாராம். (இ - எ)

### ரயில் ஆசன பதிவுநேரம்

யாழ்ப்பாணம், மார்ச்.12

கொழும்பு — யாழ் ரயில் சேவைக்கான ஆசனப் பதிவுகளை காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை மேற்கொள்ளலாம்.

இன்று முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வருகிறது. யாழ். புகையிரத நிலைய அதிபர் திரு. கே. மயில்வாகனம் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரையே ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளத்தக்கதாக இருந்தது. (இ-3)

### ஏழாலையில் உபமின்நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஏழாலையில் 80 இலட்சம் ரூபா செலவில் உப-மின் நிலையம் ஒன்றை மின்சாரசபை அமைக்கவிருக்கிறது.

ஏழாலை உப - அலுவலகத்துக்கு உட்பட்ட மக்களின் நன்மை கருதி இந்த நிலையம் அமைக்கப்படவிருப்பதாகவும் 84 ஆம் ஆண்டு இதற்கான பண ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டபோதும் தற்சமயமே வேலை ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சுன்னாகத்தில் புலிகளின் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 12

சுன்னாகத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

கூட்டத்தை அடுத்து புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப்பிரிவு நடத்தும் ''நடந்து வந்த பாதை'' என்ற வில்லிசையையும் ''விடியலைத் தேடுவோம்'' என்ற நாடகமும் இடம் பெறும். (ஒ-9)

## சுப நேரம்

13 - 3 - 1990

திங்கட்கிழமை மாசி 28

சுப நேரம்:

12-23 முதல் 1-53 வரை

ராகுகாலம்:

7-53 முதல் 9-23 வரை

திருவள்ளுவர் குருபூசை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்களும்சிறிய வானொலி பெட்டிகளும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: சோ. செந்தில் முருகன், பொற்பதி றோட், கோண்டாவில். (நாமகள் இல்லம். முன்பாக) (2853)

C. G125 Hondaவும் 1வயது அல்சேஷின் ஆண் நாயும், நாய்க் கூடும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு குறிஞ்சி பார்மசி, இல-3, நவீனசந்தை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (2843)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட் றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

T.V. கலர் சொனி 22'' பாவித்தது விற்பனைக்குண்டு றேடியோ மனுவல்ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (11975)

Hyline சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும், முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். லக்கி பாம் கவுஸ், மதவடிலேன், திருநெல்வேலி (12020)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், வாங்கப்படும் விற்கப்படும். புத்தகம் கட்டுபவர்கள் தேவை. Senathirajah, Second Hand Book House 13/6, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (2852)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் கார்ட்டுகள் விற்பனைக்கு உண்டு, ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### தேவை

பத்திரிகை மொத்த விற்பனை [Paper Merchant) நிறுவனத்திற்கு விற்பனையாளர் இருவரும், விற்பனை உதவியாளர்இருவரும்,உடன் தேவை 35 வயதிற்கு உட்பட்டவராகவும், முன் அனுபவம் உடையவராகவும் இருப்பது விரும்பத்தக்கது. Ganga Enterprises, 358 K. K. S Road, Jaffna. (சி/3963)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### புத்தகம்

இந்திய எழுத்தாளர்களான லக்ஸ்மி, சிவசங்கரி, அனுராதாரமணன், பாலகுமாரன், ரமணிச் சந்திரன் மேத்தா, உதயமூர்த்தி, த.பி.கணேசன், வரதராசன், கண்ணதாசன், சுறுவர் புத்தகங்கள், ஜோதிடம். சித்தமருத்துவம், புத்தகங்கள் வந்துள்ளன பிரதி கட்குமுந்துங்கள் நூலகங்கள், தொகையாக கொள்வனவு செய்வோர், வியாபாரிகட்கு, விசேட கழிவு. ஸ்ரீகாந் புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3488)

பங்குனி அம்புலி மாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (11927)

### For Sale

Typewriters - New Standard English Typewriters Available Contact: Fudo 39/17. Power House Road, 3rd Lane, Jaffna (Near: Shabra-Samy & Co) (C/3951)

தானியம் மற்றும் மாவகைகள் அரைக்கும் மில்லில் ஆள் தேவை. சம்பளம் நேரில். Trufood Grinders, 41, Kandappa Segaram Lane ஹரன் சினிமா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (12014)

### கோழிக்குஞ்சு விநியோகம் [Uplands Farm]

(Unsexed) தனி சிகப்பு, கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு வரி சேவல்(Lohmann) பிறவுண் சேவல், வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் (14-3-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) (2837)

### மணமகள் தேவை

வேளாள குலத்தைச் சேர்ந்த கனடாவில் Sales Representative ஆக தொழில் புரியும் 37 வயது நிரம்பிய மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை விளம்பர இல-106 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12024)

யாழ் இந்து உயர் குல வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது மது புகைத்தல் அற்ற பொறியியலாளர் [Civil Engineer Ph D -U.S.A) 7 இல் செவ்வாய் உள்ள 5' 8', உயர மணமகனுக்கு பெற்றோர் டாக்டர் அல்லது தகுதிக்கேற்ற அழகிய மணமகளை தேடுகின்றனர் ஜாதகக் குறிப்புகள் கவனிக்கப்படமாட்டாது தொடர்பு கொள்ளவும் 638 C/O உதயன் (2850)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் — யாழ்ப்பாணக் கிளை

## வருடாந்த பொதுக் கூட்டம்

இச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1990 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் திகதி (25 03-1990) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: அங்கத்தவர்கள் சந்தாப்பணத்தை 24 - 03 - 1990 க்கு முன் செலுத்தி தங்கள் 1990ஆம் ஆண்டுக்கான அறிமுக அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். கூட்டத்தில் பங்குபற்ற வரும்போது தங்கள் 1990ஆம் ஆண்டுக்கான அறிமுக அட்டையுடன் வரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி-3989]

## கேள்விப் பத்திர அறிவித்தல்

## தொலைத் தொடர்புத் திணைக்களம்

### தொலைத் தொடர்பு நுண்கருவிகளடங்கிய கொள்கலன்களுக்கான அத்திவாரம் கட்டுதல் யாழ்ப்பாணம், திருகோணமலை

அரசாங்கத் திணைக்களங்கள்/நிர்மானக் கூட்டுத்தாபனங்கள் / மாகாணசபைகள் என்பனவற்றோடு பதிவு செய்து கொண்டுள்ள கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா. 250,000/- மதிப்புக்குக் குறையாத கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, தொலைத் தொடர்புத் தலைமையகத்திலுள்ள தொலைத் தொடர்புப் பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பபடிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஒப்பந்தக்காரர்கள் மேற் கூறப்பட்டபடி பதிவு செய்து கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு ரூபா. 500,000/-க்கு மேற்பட்ட இது போன்ற ஒப்பந்தங்களைக் கடந்த இரண்டு வருட காலங்களுக்குள் திருப்திகரமாக செய்து முடித்தமைக்கான அத்தாட்சிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா. 150/- கொழும்பு 1, லோட்டஸ் வீதியில் அமைந்துள்ள தொலைத் தொடர்புத் திணைக்கள பிரதான சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு தொலைத் தொடர்பு பணிப்பாளர் அலுவலகத்தில் 1990ம்ஆண்டு பங்குனி மாதம் 27ம் திகதி நண்பகல் 12 மணி வரை பத்திரங்கள் வழங்கப்படும்.

முறைப்படி நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கேள்விப் பத்திர சபை தலைவரினால் தலைமையகத்தில் 1ம் மாடியில் உள்ள விநியோகப் பகுதியில் 1990ம் ஆண்டுபங்குனி மாதம் 30ம் திகதி காலை 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பம்:
பி. கே. விக்கிரமாராச்சி
தொலைத் தொடர்புப் பணிப்பாளர்

[சி-3441]

## 'M' THREE TRAVEL

வழங்கும்
அரிய சந்தர்ப்பம்

### ★ சவூதி அரேபியா (Saudi Arabia)

| | | |
|---|---|---|
| 1. | Plumbers(குழாய் வேலை செய்பவர்கள்) | 600 SR |
| 2. | Sewerage Treatment Technician (கழிவு நீர் சுத்திகரிப்பு உத்தியோகஸ்தர்) | 750 SR |
| 3. | Clerks | 700 SR |
| 4. | Mechanics (மெக்கானிக்) | 750 SR |
| 5. | Masons (மேசன்) | 650 SR |
| 6. | Carpenters (மரவேலை செய்வோர்) | 650 SR |
| 7. | Cleaners | 350 SR |

★ மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு சற்றேனும் ஆங்கில அறிவு தேவை.

★ இவற்றிற்கு நேர்முகப்பரீட்சை உண்டு. (12ம், 13ம் திகதிகளில்)

★ நேர்முகப்பரீட்சையில் தெரிவானால் இரு வாரங்களில் பயணத்தை மேற்கொள்ளலாம்.

### ★ குவைற் (Kuwait)

1. School Cleaners (பாடசாலை சுத்திகரிப்பாளர்கள்)

இருபாலாரும்

இவற்றிற்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தலைமை அலுவலகம்:
"இந்திர பவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3987]

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

பாலர் கல்விக் கழக காப்பாளரும், சமூக சேவையாளருமான, காலஞ்சென்ற முகாந்திரம் Dr. E. P. இராசையா J. P. அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலி

ஆசிரியைகள், ஆட்சிக்குழு உறுப்பினர்
பாலர் கல்விக்கழகம்

49/5, யாழ் தோ...
யாழ்ப்பாணம்.

To Help you
Begin Build up & Enrich your English

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
க.பொ.த. உ/த தொழில்நுட்ப, பல்கலைக்கழக, பட்டதாரி மாணவர்களுக்குரிய;

## An Integrated English Course

(ADVANCED)

6 மாத கால தீவிரப் பயிற்சி

ஆரம்பம்: 25 - 03 - 1990

★ English Speech Practice (Spoken)
★ Grammar & Usage
★ Vocabulary Enrichment
★ Reading with Understanding Prose & Verse
★ Practice in Writing

இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
கட்டணம் ரூபா 450.00 (முழுப் பயிற்சிக்கும்)
வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில்,
விபரங்களுக்கு:

## ASTAN INSTITUTE

166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1ஆம் மாடி)
[சி/3473]

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பும், நன்றி நவிலலும்

### சின்னையா நாகையா

தோற்றம்: 1 - 11 - 1932 மறைவு: 13 - 2 - 1990

13-2-1990இல் இறைவனடி சேர்ந்த சின்னையா-பிள்ளை நாகையா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 15-3-1990 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கொழும்பு முகத்துவாரத்திலும், வீட்டுக்கிரியைகள் அன்று பகல் 11 மணியளவில் வெள்ளவத்தை 37 ஆம் ஒழுங்கை 73ஆம் இலக்க இல்லத்திலும் நடைபெறும்.

இக்கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

17-2-90 இல் வெள்ளவத்தையில் நடைபெற்ற அன்னாரது இறுதிச்சடங்குகளிற் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், அன்னாரது கொக்குவில் இல்லத்திற்கு வருகை தந்து துக்கம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி சா. நாகையாவும்
குடும்பத்தினரும்.

பழமுதிர்சோலை
பொற்பதி வீதி,
கொக்குவில். (2775)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திரு. கந்தையா ஆறுமுகம்

தோற்றம்: 14- 01- 1907 மறைவு: 10- 02- 1990

ஆண்டொன்று ஆவதற்குள் அம்மாவுடன் இணைந்தனையே!

அன்புடன் நினைவு கூருவோர்:
மகள், மருமகன், பேத்தி.

அன்னார் ஆனைப்பந்தி தனியார் மருத்துவமனையில் சுகயீனமுற்றிருந்த சமயம் பேருதவிகள் புரிந்த ஆனைப்பந்திபடி வாழ் நண்பர்களுக்கும், அன்னாரின் ஈமக்கிரிகைகளின் போது பேருதவிகள் புரிந்த நாயன்மார்கட்டு அயலவர்கட்கும், இறுதிக் கிரிகைகளின் போது உறுதுணையாக நின்றுதவிய உறவினர்களுக்கும், மரணச் செய்தி கேட்டு நேரில் சமூகமளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்

41/60, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (11979)

## மல்வத்தையில் இரு இளைஞர் சுட்டுக் கொலை?

கொழும்பு, மார்ச். 12

அம்பாறை மாவட்டம் மல்வத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை இனந்தெரியாதோர் மறைந்து இருந்து திடீரென தாக்குதல் நடத்தி சுட்டுக் கொன்றதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்கள் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது.

ஆனால் இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (உ)

## இன்று

பலாலி, மார்ச் 12

காங்கேசன்துறைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு நடேஸ்வரக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-119)

## நுண்கலை மன்ற பரீட்சை

யாழ்ப்பாணம் மார்ச் 12

வட இலங்கை நுண்கலை மன்றத்தின் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெற விருக்கின்றன.

கல்வித்திணைக் களத்தின் ஆதரவில் இயங்கும் இம்மன்றத்தின் முதலாம் தரப் பரீட்சை 17 ஆம் திகதியும் இரண்டாம், மூன்றாம் தரப் பரீட்சை 17 ஆம் 18 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான அறிமுக அட்டைகள் விரைவில் அனுப்பப்படவிருக்கின்றன.

சித்திர ஆசிரியர்களுக்கு உள்ள பற்றாக்குறையை இப் பரீட்சை நீக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

## விளையாட்டுக் கழக சாதனை

வட்டுக்கோட்டை, மார்ச் 12

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் சென்றஎட்டு வருடங்களாக எல்லே விளையாட்டில் முதலிடம் பெற்று வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் எல்லே விளையாட்டில் இக் கழகம் பெரும் சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஒன்பதாவது வருடமான இவ்வருடத்தில் சங்கானை உதவி அரசாங்கப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மேலும் நடந்து முடிந்த கழகங்களுக்கிடையிலான சங்கானை உதவி அரசாங்க பிரிவிலுள்ள போட்டியில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய இரண்டிலும் முதலாம் இடத்தை பெற்றுள்ளது. (க161)

## தமிழ் இயக்க....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப்படுவதாகவும் திருமலையில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் இந்தியப் படையினர் வெளியேறிய இடங்களை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகவும் —

தற்போது திருகோணமலை நகரில் இருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்திற்குள் விடுதலைப் புலிகள் நிலை கொண்டிருப்பதாகவும் தெரியவந்தது.

எனினும் இந்தியப்படை வெளியேறியும், விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராத திருகோணமலை நகரப் பகுதியில் அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

"நிலைமைகளைப் பார்க்கும் போது இந்தியப்படை வெளியேறிய இடங்களில் அமைதியைக் கடைப்பிடிக்கும்படியும், தமிழர்கள் மீது அத்துமீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலிருப்பதை உறுதி செய்யும்படியும் இலங்கைப் படையினருக்கு அரசு கண்டிப்பான உத்தரவு விடுத்திருக்கின்றதுபோல் தெரிகிறது" - என்று திருமலை நகரவாசி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.

**பொருள்:**

கயவர், தாம் கேட்டறிந்த மறைபொருளைப் பிறர்க்கு வலியக் கொண்டு போய்ச் சொல்லுவதால், அறையப்படும் பறை போன்றவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 2288
12- 03- 1990    த. பெ. இலக்கம் : 23

# நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறை நீங்கட்டும்

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் நிலவும் நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறை நீங்க இருக்கிறது.

நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான விசேஷ பரீட்சை ஒன்று விரைவில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுக்கு உறுதி அளித்து உள்ளார்.

கொழும்பு ஜனாதிபதி செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காணிப் பங்கீடு சம்பந்தமான மாநாட்டிலேயே ஜனாதிபதி இந்த உறுதி மொழியை அளித்தார்.

வடக்கு—கிழக்கில் நிர்வாக அதிகாரிகள் பற்றாக்குறை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் சிவில் நிர்வாகம் சீர் குலைந்திருந்ததினால் இதுபற்றி எவரும் பெரிதாகக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால் தற்போது நிலைமை மாறி விட்டது. ஒரிரு அரச நிர்வாகத்துறைகளைத் தவிர சகல துறைகளும் துரிதமாக இயங்க ஆரம்பித்து விட்டன. நீண்ட காலத்துக்குப் பின்னர் பொதுமக்கள் தமது தேவைகளுக்காக அரச நிர்வாகத்தை நாட ஆரம்பித்துள்ளனர்.

இப்படியான தருணத்தில் சீரான நடைமுறைகளுக்கு தடங்கல் இருப்பதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

வடக்கு—கிழக்கில் ஏற்கனவே இருந்த நிர்வாக உத்தியோகத்தர்களில் சிலர் கொழும்புக்கு இடமாற்றப்பட்டு விட்டனர். பற்றாக்குறை நிலவுவதற்கு இதுவே பிரதான காரணம் ஆகும்.

தற்போது வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிவாரண வேலைகள், புனர்நிர்மாண வேலைகள் பெரும் அளவில் நடைபெற்று வருவதால் இந்த நிலைமை நிச்சயம் பல தாக்கங்களை ஏற்படுத்தும்.

வடக்கு—கிழக்கில் காணி அற்றோருக்கு காணிகளை வழங்கல், ஜனசக்தித் திட்டத்தை அமுல் செய்தல், மாகாண சபையின் செயற்திட்டங்களை அதிகரித்தல், பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைச் சரியான முறையில் அமுல் செய்தல் போன்ற எந்த ஒரு கருமத்தையும் போதிய நிர்வாக அதிகாரிகள் இன்றி சீராகச் செயற்படுத்த முடியாது.

ஆகவே ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு இணங்க நிர்வாக அதிகாரிகள் தெரிவுக்கான பரீட்சை காலதாமதம் இன்றி நடத்தப்பட வேண்டும். தற்போது நிலவும் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும்.

## பண்ணிசைப் போட்டி

பண்டத்தரிப்புமார்ச்12

இந்து கலை கலாசசார அபிவிருத்தி அமைச்சு பண்ணிசை போட்டி ஒன்றை நடத்துகின்றது.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் இப் போட்டியில் பங்கு பற்றி கித்தி பெறுவோருக்கு சான்றிதழ்களும் முதன்மை இடம்பெறுவோருக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

எதிர் வரும் சனிக்கிழமை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளை நடத்துவதற்கான நடுவர்கள் தெரிவும் நியமனங்களும் வழங்கப்பட்டு விட்டன.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி போட்டி மையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(இ–120)

# சிவனொளிபாதமலை செல்லும் யாத்திரிகர் எண்ணிக்கை அதிகரிப்பு

நுவரெலியாமார்ச் , 12

பல வருடங்களுக்குப் பின் இவ்வருடம் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரீகர்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பத்தர்கள் தனியார் பஸ் மூலமும், இ. போ. ச. பஸ் மூலமும் வந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

அட்டன் நகரம் யாத்திரீகளின் வருகையினால் மிகவும் சுறுசுறுப்படைந்துள்ளது.

அட்டனிலிருந்து - பஸ்கெலியா நல்ல தண்ணீர் வரை விசேஷ பஸ் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

அட்டனிலிருந்து கொழும்பு கோட்டைக்கு மேலதிக புகையிரத சேவையும் நடைபெற்று வருகின்றது.

( க – 56 )

## தமிழ்தின போட்டி

மண்டதீவு மார்ச் 12

வேலணைகொத்தணிப்பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவருக்கு. கொத்தணி அதிபர் திரு. பி. கேதாரநாதன் சான்றிதல்களை அண்மையில் வழங்கினார்.

(க–88)

## புதிய கட்டடம்

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு எட்டுஇலட்சம் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான அத்திவாரக்கல்லை வேலணை கோட்டக்கல்விப்பிரதிப்பணிப்பாளர் திரு. க. புலேந்திரன் சம்பிரதாய முறைப்படி நட்டு வைத்தார்.

வித்தியாலய அதிபர் திரு. பொ. நடராசா வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

(க 88)

பயிலுநர் ஆசிரியர்:

# நியமனம்கிடையாதோருக்கு வேறு வேலை வாய்ப்புகள்

## கல்வி ஆணைக்குழுத் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

நாடெங்கும் இருந்து பயிலுநர் ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்து நியமனம் பெறாதவர்களுக்கு கிராம மட்டத்தில் நியமனம் வழங்க பல்வேறுதிட்டங்களை அரசாங்கசேவைகள் ஆணைக் குழுவின் கல்விச் சேவைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ்மென்டிஸ் அறிவித்துள்ளார்.

25,000 பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கு 3,50,000 பேர்விண்ணப்பித் துள்ளனர். அதில் 25,000 பேருக்கு நியமனம் வழங்கிய பின் மீதியான 3,25,000 பேருக்கும் படிப்படியாக வேலைவாய்ப்பு அளிக்க இத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்திட்டங்கள் வருமாறு:

★ அவர்கள் கல்வித்தராதரம், தொழில்பயிற்சி ஆகியன குறித்து பிராந்திய அலுவலகங்கள் பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

★ எதிர்காலத்தில் ஏற்படும் ஆரம்ப ஆசிரியர் நியமனங்களில் இடமளிக்க வேண்டும்.

★ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தற்காலிக அடிப்படையில் நியமனம் வழங்கல்.

★ ஆய்வு கூடங்களில் தொழில் நுட்ப வியலாளர்களாக நியமித்து நிவாரண உதவி வழங்கல்.

★ இவர்களை வேலைப் பதிவு செய்பவர்களாக ஏற்று அந்தப்பிரிவில் ஏற்படும் அரசாங்க, தனியார் நிறுவன வெற்றிடங்களுக்கு நியமித்தல்.

★ உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனையின் பேரில் கூட்டுறவு அடிப்படையில் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தல்.

★ விசேட பயிற்சிகளுக்கு நியமித்தல். (க– 3)

# விஸாகாட் அறிமுக வைபவம்

யாழ்ப்பாணம் மார்ச் 12

இலங்கை வங்கியில் விஸாக்காட் திட்டம் ஒரு வருடத்திற்கு முன்னரேயே யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு விட்டாலும், நாட்டு நிலைமையினால் தாமதமாகி இப்பொழுது தான் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது. ஞானம்ஸ் ஹோட்டலில் சனியன்று நடைபெற்ற விஸாக்காட் அறிமுக வைபவத்தில் இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. ஏ. கணேசமூர்த்தி மேற்படி தெரிவித்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே, வளர்ச்சியடைந்த நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விஸாக்காட் திட்டம் அங்கு பிரபல்யம் அடைந்துள்ளதென்றும், அண்மையில் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்பட்ட இத்திட்டம் தலைநகரில் பெருவெற்றியை ஈட்டியுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வங்கி மேலதிக பொதுமுகாமையாளர் வி. கே. வின்சன்ட் தமதுரையில், இந்த விஸாகாட் திட்டம் வங்கிக்கு மட்டுமன்றி வாடிக்கையாளருக்கும் நன்மைபயக்கும். காசைவைத்திருப்பதால் உண்டாகும் பயம் விஸாகாட் இருப்பின் ஏற்படாது. ஐந்நூறு ரூபாய் கள்ளநோட்டுக்கள் அதிகமாக புழங்கிவரும் தற்சமயத்தில் விஸாக்காட்டைக்கொடுத்தே பண்டங்களை வாங்கிவிடலாம், எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் செயற்பாட்டு முகாமையாளர் எம். கனகரெத்தினம், பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-ஸ்ரீ)

# பண்பாட்டுக் கழக மாநாடு 4 நாட்கள் நடைபெறும்

## வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் வருவர்

யாழ்ப்பாணம் மார்ச் 12

உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக யாழ் - கிளை பண்பாட்டு மாநாடு ஒன்றை மே மாதம் ஒன்பதாம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடாத்தவிருக்கிறது.

இம் மாநாட்டில் கலந்து கொள்ள மலேசியாவில் இருந்து இரா. வீரப்பனும், தமிழகத்தில் இருந்து சோலை கிருசனும், லண்டனில்இருந்து ஞானசூரியனும், அவுஸ்திரேலியாவில் இருந்து மாத்தளை சோமுவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டையொட்டி புத்தக, ஓவிய, சிற்ப, புகைப்பட, கைப்பணிப்பொருட் காட்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க–3)

# இதுவரை 1593 முறையீடுகள் மட்டுமே கிடைத்தன!

யாழ்ப்பாணம் மார்ச் 12

யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் தெரிவு தொடர்பாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்டமுறையீடுகள் கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்திருப்பதாக கடந்த பெப்ரவரி27 திகதி உதயனில் வெளியான செய்தியை யாழ் பிரதிக்கல்வி பணிப்பாளர் மறுத்திருக்கிறார்.

இந்தச் செய்தி வெளியான தினம் வரை 555 முறையீடுகளும் முடிவு திகதியான மார்ச் 2 ஆம் திகதி வரை ஆயிரத்து 593 முறையீடுகளும் மட்டுமே கிடைத்ததாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் தமது மறுப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## நினைவில் இன்று

12 - 3 - 1990

சார்ல்ஸ் டார்வின் நினைவு தினம்,
ஏப்ரஹாம் லிங்கன் நினைவு தினம்

## கருத்தரங்கு

காங்கேசன்துறை மார்ச் 12

''உணவும், சுகாதாரமும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 13ம் திகதி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

உணவு தயாரிப்போர், உணவு பரிமாறுவோர், உணவு தயாரிக்கும் ஸ்தாபனங்களின் முகாமையாளர்கள் போன்ற பல்வேறு தரப்பட்டவர்களும் இக்கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

உணவில் சுகாதாரத்தைப் பேணுதல், கலப்படம், மோசடிகளை தவிர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கருத்துரைகள் இடம் பெறும்.

(க–68)

## உப வேந்தர் நூல் வெளியீட்டு நிதியம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ் பல்கலைக்கழகத்தில் ''உபவேந்தர் நூல் வெளியீடுகளுக்கான நிதியம்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆணைக்குழு வழங்கிய உதவியுடன் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியம் மூலம் பல்கலைக்கழக வெளியீடுகள் வெளியிடப்படும்.

இந்த நிதியத்துக்கு பொது மக்கள், பொது அமைப்புக்கள், வெளிநாட்டில் வாழும் தமிழ்மக்கள் உதவ வேண்டும் என்று உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க– 3)

## சமய சந்நிதிகளில்

### பொங்கல் விளக்கேற்று வைபவம்

சுழிபுரம் மார்ச் 12

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் கோவில் வருடாந்த பொங்கல் விளக்கேற்று வைபவம் நாளை செவ்வாய் மாலை நடைபெறவுள்ளது.

பொங்கல் பூசை வழிபாடுகள் 20 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை காலை முதல் புதன் கிழமை காலை வரை நடைபெற்று மடை மாற்றுதல் நடைபெறும்.

இவ்வாண்டு நடைபெறும் பொங்கல் பங்குனி மாதம் முதல் செவ்வாயில் நடைபெற பரிபாலன சபையினர் ஒழுங்குகள் செய்துள்ளனர்.

(இ–28)

## வாசகர் திருமுகம்

### வீதி திருத்தப்படுமா?

தொண்டமானாறு - உடுப்பிட்டி வீதி சுமார் 8 வருடங்களாக திருத்தியமைக்கப்படவில்லை.

751 ஆம் இலக்க பருத்தித்துறை - யாழ் பஸ் சேவைகளும் இவ் வீதியால் நடைபெறுகின்றன. இவ் வீதி மிகவும் கேவலமான முறையில் குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது.

இதன் காரணமாக துவிச்சக்கர வண்டிகளின் 'போக்' உடைந்து பலர் காயம் அடைந்துள்ளனர் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

**கா. அருந்தவராசா.**
கலையரசி ச. ச. நிலையம்.
தொண்டமானாறு

### ஏன் சித்தியடையவில்லை?

சென்ற மாதம் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் நெடுந்தீவில் எவரும் சித்தியடையவில்லை. இது மிகவும் வேதனைக்குரியது.

கல்விப் பகுதியினர் வசதியான கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள், இலவசப் பாடநூல்கள், வழிகாட்டிகள், போதிய தகுதியான 'ஆசிரியர்கள் ஆகிய இன்னபிற வசதிகளைச் செய்து கொடுத்தும், 43 மணவர்களில் ஒருவரேனும் இப் பரீட்சையில் சித்தியடையவில்லை.

இதற்கான காரணங்களை இத்தீவகக்கல்வி வளர்ச்சியில் ஊக்கங்கொண்ட அனைவரும் ஆராய வேண்டியது மிக மிக அவசியம்.

**சி. வ. தனிநாயகம்**
நெடுந்தீவு

### கணேசபுரப் பாலம்

28-02-1990 அன்றைய உதயன் நாளிதழில் 3ஆம் பக்கத்தில் 'கணேசபுரப்பாலம் நிதி ஒதுக்கப்பட்டும், வேலைகள் இன்னும்ஆரம்பமாகவில்லை' என்ற தலையங்கத்தில் ஒரு புதினம் வெளிவந்துள்ளது. இந்தப் பாலம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமானது. இந்தப் பாலத்தின் திருத்த வேலைகளுக்கு மதிப்பீடுகள் தயாரித்து, ஒப்பந்தம் செய்யும் நிலையில் இருக்கிறது. ஆனால் இந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டவாறு நிதி இன்னும் ஒதுக்கப்படவில்லை என்பதை அறியத் தருகின்றேன். அத்துடன் தென்னை மரத்தினால் போடப்பட்ட தற்காலிகப் பாலம் சேதம் அடையவில்லை எனவும் அறியத்தருகிறேன்.

**எந்திரி என்.ஜே. நவரட்ணராஜா,**
நீர்பாசனப் பொறியியளர்,
கிளிநொச்சிப் பிரிவு.

# மலையக மக்களுக்கும் கலை-கலாசாரம் உண்டு என்பதை உணர வைத்தவர் ஜீவா!

## வெள்ளி விழா மலர் வெளியீட்டில் தெளிவத்தை யோசப் உரை

யாழ்ப்பாணம், மார்ச்.12

'' மல்லிகை ஆசிரியர் ஜீவா எழுத்தாளனை உண்மையில் நேசிப்பவர். மலை நாட்டில் இருந்து என்னை இங்கு வரவழைத்துத் தலைமை வகிக்க வைத்ததே இதற்கு உதாரணம். மல்லிகை தொடர்ந்து 25 ஆண்டுகள் வெற்றிநடைபோட்டு வந்திருக்கிறது பெரிய சாதனையாகும். மலையக மக்கள் உழைக்க மாத்திரம் பிறந்தவர்கள் இல்லை, அவர்களுக்கும் கலை கலாசாரம் உண்டு என்பதை மல்லிகையின் மூலமும் உணர வைத்தவர் ஜீவா. மல்லிகையின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா மலரில் வெளியான கட்டுரைகள் சிந்தனைக்குரியவை, ஆய்வுக்குரியவை.

பிரபல மலையக எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப் மல்லிகை சஞ்சிகையின் வெள்ளிவிழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில், நடைபெற்ற இவ்விழாவின் ஆரம்பத்தில் முதுபெரும் எழுத்தாளர் 'வரதர்' உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. [illegible] 'தகவம்' தலைவர் [illegible] இராசையா ஆகியோர் [illegible] விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

மல்லிகையில் 25 ஆண்டுகளாகப் பணிபுரியும் திரு. க. சந்திரசேகரத்துக்கு ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடிகளுள் ஒருவரான திரு. சம்பந்தன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மல்லிகையில் பணிபுரியும் திரு. ச. முத்துக்குமாருவுக்கு திரு. த. கலாமணி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மலரின் முதற் பிரதியை திருவாளர்கள் அ. சோமசுந்தரம்பிள்ளை, எஸ். கே. மனோகரரூபன், திருமதி சுதாராஜ் ஆகியோர் மலர் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவாவிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

திரு. டொமினிக் ஜீவா பேசுகையில்; ''25 வருட வரலாறு மல்லிகைக்கு உண்டு. பல சஷ்டங்கள் வந்தபோதிலும் நான் மனங்கலங்கியதில்லை. சிதம்பரரகுநாதன், விஜயபாஸ்கரன், ஜெயகாந்தன், சிற்பி, வரதர் ஆகியோர் சஞ்சிகைகளைத் தொடர்ந்து நடத்தமுடியா[illegible] ஆனால் எனது [illegible] உ[illegible]ப்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. 50 ஆவது மலரையும் நானே எனது கையால் உங்களிடம் தருவேன்'' என்றார் அவர்,

வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் பேசுகையில், 'தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளின் தாக்கத்திற்கு எதிராகப் போராடி மல்லிகை உருவாகியது. சிரித்திரன் கடந்த 24 வருடங்களாக வெளிவந்தது. குமரன் சஞ்சிகை கொழும்பில் வெளிவருகிறது. தாமரை 30 வருடங்களாக வெளிவருகிறது'' என்றார்.

எழுத்தாளர் திக்வல்லை கமால் பேசுகையில், ''இலக்கியத்திற்காக நீண்ட தூரம் பயணம் செய்து வந்துள்ளேன். ஜீவாவுக்கு எம்மாலான உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறோம்'' என்றார்.

கவிஞர் மேமன்கவி பேசுகையில், ''நான் இந்த மேடையில் நிற்பதற்குக் காரணமே மல்லிகைதான். எனவே மல்லிகை ஆசிரியரை நான் பாராட்டாமல் இருக்க முடியாது,'' ன்றார்.

கம்பன் கழகத்தைச் சார்ந்த திரு. இ. ஜெயராஜ் தலைமையில் ''இன்றைய நவீன இலக்கிய கர்த்தாக்கள் தமது சமூகக் கடமையில் இருந்தும் வழுவி விட்டனர்'' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. 'ஆம்' என்று புலவர் ஈழத்துச் சிவானந்தனும், 'இல்லை' என்று செங்கைஆழியானும் வாதிட்டனர். (இ)

## கண்டதும் கேட்டதும்

நீண்ட நாட்களின் பின் 28 - 2- 1990 அன்று இரவு 9.30 மணிக்கு இந்திய வானொலியில் அரங்கிசையில் திரு. திருமதி. மெகிபூப் சுபாணி தம்பதியரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெற்றது. அவர்களது நாதஸ்வரத்திற்கு பக்க வாத்தியமாக யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி தவில் மேதை திரு. கே. கணேசபிள்ளை தவில்வாசித்தார். ஆந்திரமாநில முஸ்லிம் தம்பதியர் இசை உலகில் அழியா இடம் பெற்றுவிட்டனர். இத்தம்பதியரின் கோகிலத்வணி சுபகல்யாணி சங்கராபரணம் ஆகிய ராகங்களை நயமாக இதமாக வாசித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு மெருகூட்டுவதாக அமைந்தது. எமது யாழ்ப்பாணம் திரு. கணேசபிள்ளையின் தவில் என்பதை நாம் மறுக்கமுடியாது. அவர் வாசிப்பின்போது கையாண்ட தாள,லய, நயங்கள் இப்போதும் எமது காதுகளில் கணீர்கணீர்என்று இசைத்த வண்ணம் இருக்கின்றன. அவருக்கு இந்திய வானொலி அளிக்கும் கௌரவம் நமது யாழ். இசைக் கலைஞர்களுக்கு அளிக்கும் கௌரவமாக நாம் கருதிபெருமை அடைகிறோம்.

–செய்திலோலன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத். நிருபர் மீதான மரண தண்டனையால் பிரிட்டன் - ஈராக் உறவு முறியும் ஆபத்து!

பக்தாத், மார்ச் 11

உளவு பார்த்ததற்காக ஈராக் நீதிமன்றம் ஒன்று லண்டன் ஒப்சேர்வர் பத்திரிகையாளர் ஒருவருக்கு நேற்று மரண தண்டனை விதித்தது.

பத்திரிகையாளருடன் குற்றஞ்சாட்டப்பட்ட பிரிட்டிஷ் தாதி ஒருவருக்கு 15 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு பக்தாத் நகருக்கு அருகில் உள்ள ஏவுகணைத் தளத்தில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. அதில் நூற்றுக்கு அதிகமானோர் இறந்தனர் என்று சொல்லப்பட்டது.

அது பற்றிய உண்மை விபரங்களை அறிந்து கொள்ள இப்பத்திரிகையாளர் கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு சென்றார்.

திரும்பிவரும்போது பத்திரிகையாளரும் அவருடன் சென்ற தாதியும் கைதுசெய்யப்பட்டனர்.

உளவு பார்த்ததாக பத்திரிகையாளர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

மரண தண்டனையை உடனே ரத்துச் செய்யும்படி பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு அவசர வேண்டுகோள் விடுத்தார்.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்டால் இரு நாடுகளின் ராஜரீக உறவும் முறிவடையும் என்றும் பிரதமர் தாட்சமர் ஈராக்கை எச்சரித்திருக்கிறார்.

சில தினங்களில் லண்டன் பத்திரிகையாளர் மீதான மரண தண்டனை நிறைவேற்றப்படக்கூடும் என்று பக்தாத் செய்திகள் தெரிவித்தன. (எ)

## கங்காருவுக்கு 'பேஸ்மேக்கர்' இருதயத்தில் பொருத்தல்

சான்பிரான்ஸிஸ்கோ மார்ச் 11

சான்பிரான்ஸிஸ்கோ மிருகக் காட்சிசாலையில் உள்ள கங்காரு ஒன்றுக்கு இருதய உபகரணம் (பேஸ்மேக்கர்) ஒன்று பொருத்தப்பட்டது.

அதன் இருதயத்துடிப்பு நிமிடத்துக்கு 125-150 ஆக இருக்க வேண்டும்; ஆனால் இருதயத்துடிப்பு 18-40 ஆகக் குறைந்ததைத் தொடர்ந்து பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டது.

மூன்று இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் நான்கு மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர்களும் சேர்ந்து கங்காருவுக்கு பேஸ்மேக்கரை இருதயத்தில் பொருத்தினர்.

மிருகக் காட்சிச் சாலையில் உள்ள மிருகம் ஒன்றுக்கு 'பேஸ்மேக்கர்' பொருத்தியது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகின்றது. (எ)

★ சோவியத் யூனியன்

## அணுகுண்டு தயாரிக்க உதவிய ஜேர்மன் விஞ்ஞானி மரணம்!

பொன் மார்ச் 11

அணுகுண்டு உற்பத்திசெய்வதற்கு சோவியத் அரசுக்கு உறுதுணையாக இருந்த கிழக்கு ஜேர்மனியைச்சேர்ந்த விஞ்ஞானி பீட்டர் அடோல்ப் தியேஸென் தனது தொண்ணூறாவது வயதில் கடந்த திங்கள் ( 5.03.90 ) காலமானார்.

1945 இல் அமெரிக்கா, ஜப்பானில் இரு நகரங்கள் மீது அணுக்குண்டு போட்டது. அதைத் தொடர்ந்து அணுகுண்டு உற்பத்தியில் ஈடுபடும் அவசரத் திட்டம் ஒன்றை சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலின் தயாரித்தார்.

அதனைச் செயல் படுத்துவதற்காக கிழக்கு ஜேர்மனியில் இருந்து விஞ்ஞானிகள் குழு ஒன்றை ஸ்டாலின் மாஸ்க்கோவிற்கு வரவழைத்தார்.

அந்தக் குழு தென்ரஷ்யாவின் இரகசிய விஞ்ஞானத் தளம் ஒன்றில் தங்கியிருந்து அணுக்குண்டுஉற்பத்தியில்ஈடுபட்டது. அதன் பின்னர் அந்தக்குழு 1956 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்துக்குள் வந்த கிழக்கு ஜேர்மனிக்குத் திரும்பியது.

அதன் பின்னர் விஞ்ஞானி தியேஸென் பௌதிகம் மற்றும் இரசாயனவியல் ஆராய்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

கடைசியில் நாட்டின் ஆராய்ச்சிக்கழகத் தலைவர் பதவியை இவர் வகித்தார்.

## பீஹாரிலும் ஜனதாதள் ஆட்சி

பாட்னா மார்ச் 11

பீஹார் மாநில முதலமைச்சராக திரு. யாதவ் நேற்று பதவி ஏற்றார்.

இவர் ஜனதாதள் கட்சியைச் சேர்ந்தவர்.

பீஹார் மாநில சட்டசபையில் 323 உறுப்பினர்கள் உள்ளனர். அண்மையில் நடைபெற்ற தேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சியாக ஜனதாதள் வெற்றியீட்டியது. (எ)

## கோர்பச்சேவ் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு

மாஸ்கோ, மார்ச் 11

நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கொண்டுவரும் திரு. மிக்கெய்ல் கோர்பார்ச்சேவின் திட்டத்திற்கு சோவியத்யூனியனில் உள்ள ஜோர்ஜியா மாநிலமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

சுமார் 4 ஆயிரம் பேர் ஜோர்ஜியாமாநிலத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை அலுவலகங்கள் முன்பும் அரசு அலுவலகங்கள் முன்பும் கூடி நின்று எதிர்ப்புக் கோஷம் எழுப்பினர்.

## ஆளும் கட்சியில் எட்டுப்பேர் வெளியேற்றம்!

காபூல், மார்ச் 11

ஆப்கனிஸ்தானின் ஆளும் இராணுவக் கவுன்ஸிலில் இருந்து எட்டு உறுப்பினர்களை ஜனாதிபதி நஜிபுல்லா வெளியேற்றிவிட்டார்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்து கொண்டு ஜெனரல் ஷாநவாஸ் டனாய் நடத்திய சதிப்புரட்சி தோல்வியில் முடிந்ததை தொடர்ந்தே நஜிபுல்லா இந்த நடவடிக்கையை எடுத்தார்.

ஜெனரல் டனாய் தற்போது பாகிஸ்தானில் தங்கியிருக்கிறார்.

நஜிபுல்லா தலைமையில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டன. (எ)

## இந்தியா - யூகோ ஒப்பந்தம்

பெல்கிறேட் மார்ச் 11

பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவும் யூகோஸ்லேவேகியாவும் நேற்றுச் செய்து கொண்டன.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலும் யூகோ வெளியுறவு அமைச்சரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (எ)


O/L 1990 (March)
மாணவர்களுக்கு
இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [கணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடங்கள் மட்டுமே நடாத்தப்படும்.
பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit
விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Red - No — 12141
[சி-3955]



இதோ!
அஷ்டலக்ஷ்மி வெளியீடுகள்
வெளிவந்து விட்டன!
எங்கும் கிடைக்கும்!
பாலர் தமிழ் ரூபா 12/- (இரண்டாம்பதிப்பு)
(சீர்திருத்த எழுத்துக்களுடன்)
பொது அறிவு ரூபா 41/-
(Latest General Knowledge)
மூவாயிரத்துக்கும் அதிகமான விஷயங்கள் உண்டு
(சி/3436)



உடனடி வேலைவாய்ப்பு
ஈராக் நாட்டில் கட்டிட வேலைத் தொழிலாளர்கள் தேவை.
வயது: 18 வயதிற்கு மேல்
சம்பளம்: 4000 ரூபா (இலங்கைக்கு அனுப்பக் கூடியது)
ஒப்பந்த காலம்: 2 வருடங்கள்
மேலும் 2 வருடங்கள் புதுப்பிக்கக் கூடியது.
★ இருப்பிட வசதி, உணவு, வைத்தியவசதி அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
★ விருப்பமானவர்கள் பாஸ்போட்டுடனும் 10 பாஸ்போட் அளவு படத்துடனும் உடனடியாக வக்ஸ் சோல் மில் கோப்பரேசனின் பிரதிநிதியாகிய திரு. மூர்த்தி அவர்களை கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
உடனடியாகத் தொடர்பு கொள்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.
தொடர்புகொள்ளும் முகவரி:
No. 15, டாம் வீதி,
ஐந்து லாம்பு சந்தி, கொழும்பு - 12
TP. 432221 [12002]



உங்கள் தேவை!
எங்கள் சேவை!!
★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான
தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகளுக்கு
✶ ✶ ✶
"ஷீறா" (சேவைப் பகுதி)
இல. 19. 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



பகுதிநேர [Part Time]
அச்சக ஊழியர் தேவை
கொம்போஷிங் - பைன்டிங் - கட்டிங்
மற்றும் சகல அச்சக வேலைகளிலும் அனுபவம் உள்ளவர்கள் பகுதிநேர வேலைக்குத் தேவை.
வேலைநேரம்: பிற்பகல் 5.30 – நள்ளிரவு 12.00 மணி
அல்லது ஒப்பந்த அடிப்படையில் செய்யலாம்.
நேரில் தொடர்பு கொள்ளும் நேரம்:
வேலை நாட்களில் மாலை 5. 00 - 7. 00 மணி
சனி / ஞாயிறு: காலை 9. 00 மாலை 6, 00 மணி
இல: 15, 2ம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி தம்பிராசா கனகம்மா**

தோற்றம்: 05- 06- 1932 உதிர்வு: 12- 03- 1988

எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அடம்பன்,
ஆலங்குளம்,
வட்டக்கண்டல். (2753)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இராசமணி நவராசா**


தோற்றம்: 25-4-1945 மறைவு: 14-2-1986

திதி: 12-3-1990

தங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள்.

''மிதிலை''
ஸ்டேஷன் றோட்,
சுன்னாகம் கிழக்கு. (2722)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**வே. த. நடராஜா**

(முன்னாள் சுன்னாகம் ப.நோ. ச. கிளை முகாமையாளர்)

மலர்வு: 04 - 06 - 1938 உதிர்வு: 10 - 02 - 1990

அன்பின், பண்பின் உறைவிடமாய், பாசத்துடன் எம்மை வளர்த்து, அறிவொளியூட்டி, வளமுடன் வாழ வழி வகுத்து எம் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாய் நிறைந்து நிற்கும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

'' தர்மியம்பதி '',
வட்டுவினி, இணுவில். (2748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### தொலைத் தொடர்புத் திணைக்களம்

### வடக்குக் கிழக்குப் புனருத்தாரண வேலைத்திட்டம்

### துணுக்காய் கட்டிட புனருத்தாரண வேலைகள்

அரசாங்கத் திணைக்களங்கள் / நிர்மாணக் கூட்டுத் தாபனங்கள் / மாகாண அபிவிருத்திச் சபைகள் என்பனவற்றோடு பதிவு செய்து கொண்டுள்ள கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒரு மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேற் கூறப்பட்ட கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, தொலைத் தொடர்புத் தலைமையகம், 06ம் மாடி, தொலைத் தொடர்புப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட இதற்கான படிவத்தில் இணைப்படிவத்துடன் (Duplicate) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முறைப்படி நிரப்பப்பட்ட கேள்வி ஆவணங்கள் தொலைத் தொடர்புத் திணைக்கள கேள்விப்பத்திர சபைத் தலைவரினால் 1990 மார்ச் 30 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மேற் கூறப்பட்ட பதிவு செய்து கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்குக் கடந்த இரண்டு வருட காலங்களில் 500,000/– ரூபாவுக்கு மேற்பட்ட இது போன்ற ஒப்பந்தங்களை மேற் கொண்டு அவற்றை திருப்திகரமாக முடித்தமைக்கான ஆவண அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, தொலைத் தொடர்பு திணைக்கள பிரதான சிறாப்பரிடம் செலுத்திய திருப்பிக் கொடுபடாத காசு வைப்புப் பணம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பொதுப் பற்றுச் சீட்டை சமர்ப்பிக்கும் தகுதி வாய்ந்த ஒப்பந்தக் காரர்களுக்கு, தொலைத் தொடர்புப் பணிப்பாளர் அலுவலகத்தில் 1990 மார்ச் மாதம் திகதி 27 நண்பகல் 12 மணிவரை இப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஒப்பம்:
பி. கே. விக்கிரமாராச்சி
தொலைத் தொடர்புப் பணிப்பாளர்

[சி–3440]



## WANTED

### 1. Welding Instructor.

To train youths in Electric Arc Welding and gas welding. candidates with some Technical qualifications and relevant experience may apply giving complete bio - data along with copies of certificates.

**Salary:** Negotiable but not Less than Rs. 2,500/- p.m.

**Age:** Below 40 years

### 2. Carpentry Instructor

To train youths in basic carpentry Practice. candidates with some technical qualifications and relevant experience may apply giving complete bio - data along with copies of certificates.

**Salary:** Negotiable, but not less than Rs. 2, 500/- p.m.

**Age:** Below 40

Applications for the above posts should reach the Hindu Board of **Education, Kalasalai Road, Thirunelvely, Jaffna.** On or before 20 th March, 1990

**Vice-President.**

(C-3979)



### யாழ்ப்பாணக் கல்லூரி

மாணவர் கிறிஸ்தவ இயக்கம்
வழங்கும்

## ★ கல்வாரியின் தொனி ★

இன்னிசை நிகழ்ச்சி

அத்துடன்

கிறிஸ்தவ, சுவிசேஷ, வேதாகம புத்தகங்களும் விற்கப்படும்

காலம்: 13 - 03 - 1990 (செவ்வாய்க்கிழமை) 2–30 p.m.

இடம்: கல்லூரி, ஒட்லி மண்டபம்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(2763)


### கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படும்

# மாகாணசபை சட்டத்தை திருத்த அரசாங்கம் முயற்சி!

## எதிரணி ஆதரவைத் திரட்ட இரகசிய ஆலோசனை

கொழும்பு, மார்ச் 12

இலங்கை அரசமைப்புக்கு முரணாகச் செயற்படும் மாகாணசபைகளை கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் விதத்தில் மாகாணசபைகள் சட்டம் திருத்தப்படும்.

இது தொடர்பான சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவை அரசாங்கம் பெற முயற்சித்திருக்கிறது.

இது தொடர்பாக எதிர்க்கட்சி வட்டாரங்களுடன் கீழ் மட்டத்தில் இரகசிய ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக அறியவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை தன்னை ''ஈழ ஜன நாயகக் குடியரசின் தேசிய அரசப் பேரவையாக'' பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து எழுந்துள்ள சிக்கல் நிலையைத் தீர்ப்பதற்காகவே புதிய சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது.

இலங்கையின் அரசமைப்புக்கு முரணான விதத்தில் செயற்பட்டிருப்பதாகக் கூறப்படும் வடக்கு, கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கு தற்போதைய சட்டங்களின் கீழ் இலங்கை ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை.

வேண்டுமானால் குறிப்பிட்ட மாகாண சபை ஒழுங்காக செயற்படவில்லை என்று காரணம் காட்டி அதன் நிர்வாகத்தை மட்டுமே ஜனாதிபதி பொறுப்பேற்க முடியும்.

அதேவேளை–

இந்தியாப் படை இங்கிருந்து வெளியேறுவதை அடுத்து வடக்கு, கிழக்கு மாகாண அரசும் முற்றாக ஸ்தம்பிக்கும் நிலையை அடைந்திருக்கிறது.

தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாண அரசைக் கலைத்து மாகாணசபைக்கான புதிய தேர்தல்களை நடத்துமாறு அரசு–விடுதலைப்புலிகள் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகள் தரப்பிலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தக் காரணங்களினால் தான் வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைக்க அரசு முடிவு செய்ததாக அறிய வந்தது.

ஆகவே குறிப்பிட்ட மாகாண சபையைக் கலைப்பதற்கு வசதியாக மாகாணசபை சட்டத்தை திருத்த அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு மாகாண சபையின் பிரகடனத்தைக் காட்டி –

அத்தகைய பிரகடனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அரசும், எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி –

மாகாணசபை சட்டதிருத்தத்தை கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வந்தது. (உ)

## வீதியில் மயங்கி விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

வீதியில் மயங்கி விழுந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கடந்த 9 ஆம் திகதி இவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் சுமார் 30 வயது 5 அடி உயரமானவர் என்றும் நீலநிற சாரமும், இள நீல சேர்ட்டும் அணிந்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-9)

## வானொலி நிகழ்ச்சிகள் 12- 3- 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவநற்சிந்தனை |
| 5.50 | கத்தோலிக்க நற்சிந்தனை |
| 5.55 | போதிமாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தகசேவை |
| 6.30 | செய்திகள் |
| 6 40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தகசேவை |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச்செய்திகள் |
| 7.50 | வர்த்தகசேவை |
| 8.00 | வாத்தியவிருந்து |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 8.30 | மாதர்மஜ்லிஸ் |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10·00 | இசையமுதம் |
| 10.30 | பாட்டு |
| 11.00 | இசைக் கச்சேரி |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6 15 | பக்திநெறி |
| 6.30 | விஞ்ஞானதீபம் |
| 7,00 | நாடகைமேடைப் பாடல்கள் |
| 7.30 | அங்கும் இங்கும் செய்திச்சுருள் |
| 7.50 | உலகச் செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப்பாடல்கள் |
| 9.30 | பேச்சு |
| 9.45 | அகில இந்திய வானொலி நிலைய ஒலிபரப்பு |
| 10.45 | குரல்வ[illegible] |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு |

## ஜி.சீ.ஈ உயர் பரீட்சை முடிவு இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது,

இதேசமயம், தென்பகுதியில் நேற்று முன்தினமே (சனிக்கிழமை) பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன என தெரியவருகிறது.

(ஒ- எ)

## சென்ஜோன்ஸ் சென்பற்றிக்ஸ் வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் மார்ச் 12

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி 115 ஓட்டங்களை எடுத்தது. பிரசாந்தன் 52, முரளி 22, புஸ்பவினோதன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். அந்தனிப்பிள்ளை 4 விக்கட்டுக்களையும், இன்பசோதி, அந்தனிகுயீன் ஆகியோர் தலா 2விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

சென் பற்றிக்ஸ் அணி தனது முதல் இனிங்சில் 139 ஓட்டங்களைப் பெற்றது. விஜேந்திரா 28, வன்னியசிங்கி 26, வில்டன் 25, ஜிலியன் 19, அகிலன்12 ஓட்டங்களை பெற்றனர். முரளி, பிரசாந்தன் ஆகியோர் தலா 4விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

சென் ஜோன்ஸ் அணி தனது இரண்டாவது இனிங்சில் 7விக்கட் இழப்பிற்கு 179 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. முரளி 43, சதீசன்43, சுரேன்குமார் 33, ஜெகேந்திரன்21 ஓட்டங்களை பெற்றனர். அந்தனிப்பிள்ளையும் அந்தனிகுயீனும் தலா மூன்று விக்கட்டுகளை கைப்பற்றினர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது இனிங்சில் 9 விக்கட்டுக்களை இழந்து 82ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டம் முடிவடைந்தது. வில்டன் 30, பாஸ்கரன் 21 அந்தனிகுயீன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். முரளி 5 விக்கட்டுகளையும் பிரசாந் 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். (இ)

## நாவலர் பற்றி பேரா.கைலாசபதி முழுமையான ஆய்வு செய்தார்

### நினைவு ஆய்வரங்கில் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 12

''தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணியாற்றிய நாவலர் பெருமான் பற்றி முழுமையான ஆய்வு மேற்கொள்வதன் மூலம் சைவத் தமிழ் மக்களின் பாரம்பரியத்தை அறிய பாடுபட்டவர் பேராசிரியர் க. கைலாசபதி''

தேசிய கலை இலக்கியப் பேரவை ஆதரவில் நடந்த பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்கில் பேசுகையில் திருமதி அம்மன் கிளி முருகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

### மாகாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விப் பணிப்பாளரான திரு. சுந்தரலிங்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றிற்கு பதவிஉயர்வு பெற்றதை அடுத்தே இந்த நியமனம் [illegible] (ஒ-9)

## தையல் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம் மார்ச் 12

மறவன்புலோ பகுதி யுவதிகளுக்கு உதவும் வகையில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

80யுவதிகளுக்கு பயிற்சியளிக்கும் இந்த நிலையத்தை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சுந்தரம் பிள்ளை திறந்துவைத்தார். யாழ்-மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். [illegible]த்தினமும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார். (க-3)

## கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச்10

யாழ்ப்பாணம் - மண்டைதீவு பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பொதுஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முன்னர் பொதுஸ்தாபனங்கள் போக்குவரத்துச் சபையுடன் தொடர்பு கொண்ட போது வீதிச்சேதம் காரணமாக பஸ்சேவை நடத்த முடியாது என கூறப்பட்டதாம். தற்பொழுது வீதி திருத்தம் செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இச் சேவை நடைபெற வில்லை.

மக்கள் நலன் கருதி இச் சேவையை தினமும் மூன்று தடவைகளாவது நடத்துமாறு பொது ஸ்தாபனங்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

## வில்லிசை

மானிப்பாய் மார்ச் 12

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலாசாரப் பிரிவினரால் ''நடந்து வந்த பாதையிலே'' என்ற வில்லிசை நிகழ்ச்சியும், 'விடிவைத்தேடி' என்ற நாடகமும் அண்மையில் சுதுமலை அம்மன் கோவில் வீதியில் இடம் பெற்றன. ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்து மேற்படி நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு ரசித்தனர். (க-90)

## நயினை ம. வி. க்கு புதிய கட்டடம்

மண்டைதீவு மார்ச் 12

நயினாதீவு மகாவித்தியாலயத்திற்கு புதிய மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இட வசதியின்மைமை நிவர்த்தி செய்வதற்காக இந்தகட்டடத்துக்குரிய நிதியை கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது. (க–88)

## முஸ்லிம் ஆசிரியர் நியமனம்

மண்டைதீவு மார்ச் 12

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் அண்மையில் நியமிக்கப் பட்டுள்ளார்.

வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் முஸ்லிம் மணவர்களின் நலன் கருதி இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வேலணை கோட்டக் கல்விப் பிரதி பணிப்பாளர் திரு. க. புலேந்திரன் தெரிவித்தார். (ச–88)


## வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

காரைநகர் மணிவாசகர் சபையினர் காரைநகரிலுள்ள சகல சைவ ஆலயங்களிலும் வெள்ளிக்கிழமை தோறும் கிழமைக்கு ஓர் ஆலயமாக பஜனை, சமயச் சொற்பொழிவு ஆகியவற்றை நடத்தி வருகின்றனர்.

இந்த சமய நிகழ்ச்சிகளுக்கு கோவில் தர்மகர்த்தாக்கள் அடியார் பெற்றோர் ஆசிரியர் மாணவர்கள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள் அதற்கு உதவும் வகையில் சகலதனியார் கல்வி நிறுவனங்களும் வெள்ளிக் கிழமைகளில் வகுப்புக்களை நடத்தாமல் ஆதரவு வழங்கி வருகின்றன.


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



### சுப்பிரமணியம் பொன்னையா

மலர்வு: 09 – 06 – 1907

உதிர்வு: 10 - 02 – 1990

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியோர், தந்திமூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். 12 – 3 – 1990 (திங்கட்கிழமை) காலை நடைபெறவுள்ள 31 ஆம் நாள் வீட்டுக் கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி சரஸ்வதிப்பிள்ளை பொன்னையா,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


விபுலானந்தர் வீதி,
அரியாலை.

(11990)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்




12 - 03 - 1990 திங்கட்கிழமை

# 6ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். ஆதரவு தரும்

## இன்னும் மூன்று எம் பிக்களின் ஒத்துழைப்பு அரசுக்குத் தேவை

கொழும்பு, மார்ச் 12

**அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பிக்கள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவார்கள்.**

**இந்தத் தகவலை அந்த அமைப்பைச் சேர்ந்த எம். பி திரு. கே. யோகசங்கரி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்களின் போது ஆறாவது திருத்தத்தை நீக்கும்படி புலிகள் வற்புறுத்தி வருவதும் —

அதற்கு இலங்கை அரசு இணங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பதும் தெரிந்ததே.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதாயின், அதற்கென அரசமைப்புக்கு மற்றொரு திருத்தத்தைக் கொண்டுவந்து, அதன் மூலம் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டும்.

புதிய திருத்தத்தை அரசமைப்புக்குக் கொண்டுவருவதாயின் அந்த திருத்தச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் ஆளும் ஐக்கியதேசியக்கட்சிக்கு 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 125 ஆசனங்களே இருக்கின்றன.

அதில் சபாநாயகரை தவிர்த்தால் வாக்களிக்கும் தகுதி உடையவர்கள் 124 பேரே உள்ளனர்.

ஆகவே நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பலத்தைப் பெறுவதற்கு அரசுக்கு மேலும் 26 எம். பிக்களின் ஆதரவு தேவை.

ஈரோஸ் எம். பிக்களாக இருக்கும் 13 பேரும் ஆறாவது திருத்தத்தை நீக்கும் விடயத்தில் அரசுக்கு ஆதரவு தருவார்கள் என்று நம்பப்படுகிறது.

திரு. யோகசங்கரி வெளியிட்ட தகவலின் பிரகாரம் ஈ. பி. ஆர். எல். எவ். உட்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் 10 பேரும் ஆறாவது திருத்தத்தை நீக்க அரசுக்கு ஆதரவளிப்பார்கள்என எதிர்பார்க்கப்படுகிறது.

மிகுதி மூன்று எம். பிக்களின் ஆதரவு இருந்தால் அரசுக்குக் காரியம் இலகுவாகிவிடும். முஸ்லிம்காங்கிரசைச் சேர்ந்த நான்கு எம். பிக்கள், ஐக்கிய சோசலிச முன்னணியின் இரண்டு எம். பிக்கள் ஆகிய அறுவரில் மூவர் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கினால் நினைத்தது நிறைவேறும் என்றநிலை இப்போது.

''ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்குவார்களா?'' — என்று திரு. யோகசங்கரியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது—

''தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் எதுவாக இருந்தாலும் அதை ஆதரிக்க ஈ. பி. ஆர். எல். எவ். பின்னிற்காது.

அதே வேளை ஈ. பி. ஆர். எல். எவ்வின் ஆதரவை வைத்து சில குழுக்களோ அல்லது சில நபர்களோ ஆதாயம் தேட முற்பட்டாலும் கூட நாம் அது பற்றி அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

தமிழ்பேசும் மக்களின் நலனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் நாம், நமக்கு ஆதாயம் தேடிக்கொள்ள முயற்சிக்கக்கூடாது என்பதுதான் எமது நிலைப்பாடு.

யாரும் அப்படி ஆதாயம் தேட முற்பட்டால் அது அவர்களின் அறிவிலித்தனமாகவே இருக்கும்.

6ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு பெரும் தீங்கையும், இடர்களையும் விளைவிப்பதாக இருக்கிறது.

நாம் தேர்தலில் வென்று நாடாளுமன்றத்திற்கு வந்தவுடனேயே ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்று கோரினோம்.

ஆகவே ஆறாவது திருத்தத்தை நீக்கும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதில் நாம் அக்கறையாகவும், அதற்கு ஆதரவாகவும் இருப்போம் — என்றார். (உ)

## எலியால் விமானம் தாமதம்!

கொழும்பு மார்ச், 12

எலியினால் விமானப் பயணம் அரை மணித்தியாலம் தாமதமான சம்பவம் கடந்த புதன்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்றது.

சவூதி அரேபியா தலைநகர் பெத்தாவுக்கு புதன் காலை புறப்பட இருந்த விமானம் ஒன்றில் பயணிகள் ஆசனத்தின்கீழ் எலி ஒன்று அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்ததை சிப்பந்திகள் கண்டனர்.

விமான நிலைய அதிகாரிகள் எலியை தேடிப் பிடித்த பின்னரே விமானம் புறப்பட்டது. இதனால் ஏற்பட்ட தாமதம் அரைமணிநேரமாகும். (இ-எ)

## தபால் ரயில் பொதிகளுக்கு அரைக் கட்டணம் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச். 12

தபால் ரயில் மூலம் அனுப்பப்படும் பொதிகளுக்கு இரண்டு மடங்கு கட்டணம் அறவிடுமாறு ரயில்வே தலைமையகம் ரயில் நிலைய அதிபர்களைப் பணித்துள்ளது.

யாழ்தேவி, உத்தரதேவி போன்ற ரயில்களில் அனுப்பப்படும் பொதிகளுக்கு அறவிடப்படும் கட்டணத்தில் அரைப்பங்கு கட்டணமே தபால் ரயில்களில் அனுப்பும் பொதிகளுக்கு முன்பு அறவிடப்பட்டு வந்தது.

ஆனால் புதிய அறிவித்தலின்படி அரைப்பங்கு கட்டணச் சலுகை நீக்கப்பட்டுள்ளது. (இ-3)

## முகாமைத்துவப் பயிற்சிக்கு மேலும் 10 பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச். 12

யாழ்-அரசாங்க செயலகத்துக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு மேலும் 10 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

34 பட்டதாரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருந்தனர்.

இவர்கள் பல்வேறு திணைக்களங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

### ரூபா 15 ஆயிரம்

## மக்கள் வங்கி 60 நாட்களுக்குள் கொடுத்து முடிக்கவேண்டும்

யாழ்ப்பாணம். மார்ச் 12

சேதமடைந்த வீடுகளைத் திருத்த வழங்கப்படும் 15 000 ரூபா நிவாரணக் கொடுப்பனவுகளை 60 நாட்களுக்குள் வழங்கவேண்டும் என்று மக்கள் வங்கிக்கு யாழ் அரசாங்க செயலகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

மீளக்குடியமர்தல், உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடை ஆகிய கொடுப்பனவுக்கான பணம் இலங்கை, மக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டபோதும் நிபந்தனை எதுவும் விதிக்கப்படுவதில்லை.

ஆனால் விடமைப்பு நிவாரணத்துக்கு மட்டும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு மக்கள் வங்கி ஊடாகத்தான் வழங்கப்படுகிறது.

இந்தக் கொடுப்பனவை 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்து பட்டியலைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று அரசாங்க செயலகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (இ-3)

## சர்வகட்சிகளுடன் ஹமீது பேசவுள்ள 4 விடயங்கள்

கொழும்பு, மார்ச் 12

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எதிர்காலம் பற்றி இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுடன் அரசின் சார்பில் அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீது பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கின்றார்.

★ வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றி சர்வசன வாக்கெடுப்பு.

★ குடியேற்றத் திட்டங்கள்.

★ 6 ஆவது அரசவைப்புச் சட்டத் திருத்தத்தை ரத்துச் செய்யும்படி விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கை.

★ சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு ஆகிய விடயங்கள் இப்பேச்சுக்களின்போது இடம் பெறும்.

ஒவ்வொரு அரசியல் கட்சிப் பிரதிநிதிகளோடு தனித்தனியாகவே இப்பேச்சுக்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் ஹமீது தெரிவித்தார். (ஒ-எ)

## தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தித் திட்டங்கள்

### லண்டனில் இம்மாதம் கருத்தரங்கு

லண்டன், மார்ச். 12

தமிழீழ மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முன்னெடுக்க வேண்டிய ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று லண்டனில் நடைபெற உள்ளது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் (றூட்) ஏற்பாடு செய்திருக்கும் பிரஸ்தாப கருத்தரங்கு இம் மாதம் 24 ஆம், 25ஆம் திகதிகளில் லண்டனில் ஹேர்ம் ஹவுசில் நடைபெறும்.

தமிழீழத்தின் சலாசார வரலாற்றுப் பின்னணியிலும், இப்போது நிலவும் அரசியல் யதார்த்த நிலையின் பின்னணியிலும், விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும், அபிவிருத்தியிலும் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதே இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம் என்று தமிழீழ வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி உதவும் நிறுவனங்கள் தொழில்சார்பினர், சிந்தனையாளர்கள் ஆகியோரின் உதவியுடனும் அனுசரணையுடனும் ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டங்களை அடிமட்டத்தில் இருந்து முன்னெடுத்துச் செல்ல அர்த்த பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தக் கருத்தரங்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுதேசிய தொழில் நுட்பங்களை உருவாக்குதல், குடிசைக்கைத்தொழில்கள், சிறுகைத் தொழில்கள், விவசாயம் மீன்பிடி ஆகியவற்றின் மூலம் சமூக அபிவிருத்தி, சக்தி வளங்கள், சுகாதாரம்என்பன உள்ளிட்ட பல விஷயங்கள் சம்பந்தமாகக் கருத்தரங்கில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். (அ)

## வன்னியில் கோடை மழை!

ஒட்டுசுட்டான், மார்ச் 12

வன்னிப் பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது.

கிளிநொச்சிப் பகுதியிலும் மற்றும் ஒட்டுசுட்டான், மாங்குளம், முருகண்டிப் பகுதியிலும் மழை பெய்து வருகிறது.

இதேவேளை கொக்காவில் பகுதியில் பெருமழை பெய்து வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கொழும்பிலும் [illegible] கிழமை சுமாரான மழை பெய்தது. (ஒ - 113)

## யாழ் நூலகத்தை புனரமைக்க முன்னோடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ் நூலகத்தை மீண்டும் பழைய நிலைக்குபுனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் மே 22 ஆம் திகதி இந்த நூல் நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான வண. லோங் அடிகளாருக்கு முத்திரை ஒன்று வெளியிடப்பட உள்ளது.

முத்திரை வெளியீட்டு விழா யாழ் சம்பத்தரிசியார் கல்லூரியில் நடைபெறும்.

முத்திரைவெளியீட்டு விழாவுக்கு வரும் அனைவரும் நூலகத்திற்கு அன்பளிப்பாக ஒவ்வொரு புத்தகத்தை எடுத்து வரும்படி கோரிக்கை விடுக்கப்பட உள்ளது.

அத்துடன் யாழ் மாநகர சபை ஆணையாளருடன் கலந்தாலோசித்து பிரஸ்தாப நூலகத்தை மீண்டும் புனரமைக்கும் வேலைகளை மீண்டும் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## தமிழ்மொழி அமுலாக்கல்; தாமதத்தை நீக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 12

தமிழ்மொழி அமுலாக்கல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தாமதத்தை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இதற்கமைய [illegible] அமைப்புகளில் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் தட்டெழுத்தாளர்களை நியமிக்கவும் ஆறு மாதங்கள் சேவையாற்றிய பின்னர் அவர்களை நிரந்தரமாக்கவும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. (ஒ.எ)

## யாழ் இந்து நூற்றாண்டு விழா:

## தமிழ் திறன் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். இந்துக் கல்லூரித் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த்திறன் போட்டிகள் இன்று கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகின்றன.

இன்று காலை 9 மணிக்கு பேச்சுப் போட்டி ஆரம்பமாகும். நாளை 13ஆம் திகதி, மறுதினம் 14ஆம் திகதியும் பேச்சுப் போட்டி நடைபெறும்.

ஆக்கம்(கட்டுரைப்போட்டி) நாளை 13ஆம் திகதியும் அடுத்தநாள் 14ஆம் திகதி கவிதை, சிறுகதைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் காலை 9-30 மணிக்கு ஆரம்பிக்கும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த மாணவர்களுக்கான பிரவேசப் பத்திரங்கள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுவிட்டன என்றும் —

பிரவேசப் பத்திரம் கிடைக்காதவர்கள் யாழ் இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றுபவர்களின் பிரவேசப் பத்திரங்கள் பாடசாலை அதிபரினால் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர் திரு' கமலநாதன் தெரிவித்தார். (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் பரமேஸ்வரன்

யாழ்ப்பாணம் தட்டா தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சோ. பரமேஸ்வரன் 8ஆம் திகதி அகால மரணமானார்.

இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (டென்மார்க்), ரகுநாதன் (சுவிற்சலாந்து), மாலினி (விவேகானந்த மகா வித்தியாலயம், கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனியின் [டென்மார்க்] அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை **(இன்று)** பிற்பகல் உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்;
**கு. ஸ்ரீகாந்தா**

7ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

[11989)

### சங். சகோதரி மேரி கபிரியெல்லா

சங். சகோதரி மேரி கபிரியெல்லா 11- 3- 1990 இல் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி றோசம்மா அம்புறோஸ், திருமதி மேரி மங்களம் இராசையா, காலஞ்சென்ற சரா இம்மனுவேல் ஆகியோரின் சகோதரியாவார்.

அன்னாரின் பூதவுடல் 12-3-1990 திங்கள் மாலை 3-30 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் ;
**ச. றெஜினோல்ட்**

(2777)

### அருட்சகோதரி கபிரியெல்லா சைமொன்

'என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'
(அரு. 11/25)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்/திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி கபிரியெல்லா சைமொன் 11 - 3 - 90 ஞாயிறு அதிகாலை இறைபதமடைந்துள்ளார், இவர்கள் இளவாலை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தீவுப்பகுதி, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மடுப்பதி ஆகிய இடங்களில் பணிபுரிந்துள்ளார்.

இறுதிச் சடங்குகள் 12-3-90 திங்கள் பிற்பகல் 3-45 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும். அருட்சகோதரியின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மாகாணத் தலைவி,
தி. கு. மாகாண இல்லம்.

(2778)

### N. S. நாகரட்ணம் (ராசா மாஸ்டர்)

நாவற்குழியைச் சேர்ந்த நாகநாதர் செல்லப்பா நாகரட்ணம் (Rtd. Head Master) காலமானார். அன்னார் அமிர்தாம்பிகையின் (Rtd. Teacher) அன்புக் கணவரும், தேவராஜீ (France), தேவஜெகன் (Germany), தேவசுதன் (Canada), சுசிலன் (Canada), தயாநிதி (France) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சாந்தகுமார் (France), செல்வி (Germany), ராகினி (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகி, குகப்பிரியா, ரகு ஆகியோரின் ஆசைப் பாட்டனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, பொன்னம்பலம் ஆகியோரின் அருமைத் தம்பியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நாவற்குழி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல் :
**க. அன்னலிங்கம்**
(Rtd. Station Master)

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி.

(C/3443)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org